2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம், நான்காவது சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க விவசாய நிலங்களைக் கையகப்படுத்தும் முயற்சியால் விவசாயிகள் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒசூரை அடுத்த நாகமங்கலம், ஆயனப்பள்ளி, உத்தனப்பள்ளி ஆகிய 3 ஊராட்சிகளில் அரசு நான்காவது சிப்காட் தொழிற்சாலை அமைப்பதற்காக விவசாயிகளுடைய 5,000 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்தும் முயற்சியினால் அந்த விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே ஒசூரில் 3 சிப்காட்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் தங்கள் நிலங்களை இழந்திருக்கிறார்கள். நான்காவது சிப்காட் அமைத்தால் ஒட்டுமொத்த விவசாய நிலங்களும் பறிபோகின்ற அபாயம் இருக்கின்றது. ஆகவே, விளைநிலங்களில் தொழிற்பேட்டை அமைப்பதை அரசு கைவிட்டு, அங்கே ஏராளமாக இருக்கின்ற அரசு தரிசு நிலங்களிலே தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சியை முன்னேற்ற வேண்டுமென்று சொன்னால் நாம் ஒரு* land bank create *செய்ய வேண்டுமென்பது அவசியமாக இருக்கிறது. நம்முடைய தொழில் துறையினுடைய நோக்கமாக, ஏறத்தாழ 45,000 ஏக்கர் அளவிலே இன்றைக்கு நாம் ஒரு* land bank create *செய்ய வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், அதனுடைய புவியியல் அமைப்பு தொழில் துவங்குவதற்கு ஏற்ற இடமாக இருக்கிறது. எதிர்காலத்தில் அருகில் இருக்கக்கூடிய பெங்களூருவிலே தொழில் பெருவழிச் சாலையினுடைய முனையம் வர இருக்கிறது. பொதுவாகவே, பெரும் தொழிற்சாலைகள் கிருஷ்ணகிரி மாவட்டத்திலே இப்போது வந்து கொண்டிருக்கின்றன.* Tata Electronics *மற்றும்* electronic vehicles

2022 மார்ச் 24] [திரு. தங்கம் தென்னரசு]

தயாரிக்கக்கூடிய ஒரு hub மூலமாக அங்கே நிறைய தொழில் தொடங்க வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே, அங்கே தொழிற்பேட்டைகள் அல்லது தொழிற்பூங்காக்கள் அமைக்க வேண்டியது அரசினுடைய கடமையாகவும் அவசியமாகவும் இருக்கிறது. இந்தத் தொழிற்பூங்காக்களை அமைப்பதற்கு நிலங்களைக் கையகப்படுத்துகிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். "விவசாயிகளுக்கு விரோதமாக, வேளாண் பெருங்குடி மக்களுக்கு விரோதமாக அவர்களுடைய நிலங்களைக் கையகப்படுத்த வேண்டாம்; கூடுமானவரையில் அங்கே இருக்கக்கூடிய land aggregators யாராவது இருந்தால் அவர்களிடத்தில் பேசி வாங்கலாம் அல்லது கம்பெனிகள் மொத்தமாக நிலங்கள் வைத்திருந்தால் அவர்களிடத்திலிருந்து முதலிலே வாங்குங்கள்" என்று எங்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, எந்த விவசாயிகளிடமிருந்தும் வலிந்து, வன்மையாக அந்த நிலங்களைக் கைப்பற்றிக்கொள்வது இந்த அரசினுடைய நோக்கமல்ல; அதேசமயத்தில் தொழில் வளர்ச்சியையும் நாம் கவனிக்க வேண்டும். எனவே, விவசாயிகளிடத்திலே கூடுமானவரையிலே பேசி அவர்களை நாம் convince செய்து ஒரு நல்ல compensation package-வுடன் அவர்கள் கொடுப்பதற்கு முன்வந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது வேறு வகையில் இருந்தால் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சுமுகமான சூழ்நிலையை அங்கே உருவாக்க நிச்சயமாக தொழில் துறை நடவடிக்கை எடுக்கும். அதுகுறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நாங்கள் பேசுவோம் என்பதை உங்கள் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் 23-3-2022 அன்று மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட தேசியப் பேரிடர் நிவாரண நிதி குறித்து எழுப்பியது விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து எவ்வளவு தேசிய பேரிடர் நிவாரண நிதி